ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

कल्याणानां निदानं कलिमलमथनं जीवनं सज्जनानां
पाथेयं यन्मुमुक्षोस्सपदि परपदप्राप्तये प्रस्थितस्य ।
विश्रामस्थानमेकं कविवरवचसां पावनं पावनानां
बीजं धर्मद्रुमस्य प्रभवतु भवतां भूतये रामनाम ॥

प्रसन्नराघवे ।

சிறப்புகளுக்குக் காரணமும், கலிதோஷத்தைக் கடைந்து அப்புறப்படுத்துவதும், ஸாதுக்களை உயிர்ப்பிப்பதும், மோக்ஷத்தில் விருப்பங்கொண்டு பரமபதத்தை நாடிப் பிரயாணம் செய்கிறவருக்குக் கட்டமுதும், உத்தம கவிகளின் திருமொழிகளுக்கு விடாயாற்றிடமும், சுத்தமான வஸ்துக்களுக்குள் மிகச்சிறந்ததும், தர்மவிருக்ஷத்தின் விதையுமான ஸ்ரீ ராமபிரானின் திருநாமம் உங்களுக்குச் சிறப்பையளிக்க வல்லதாகட்டும்.

இவ் வுலகில் ஸாமான்யமாய் எல்லாப் பிராணிகளும் ஐஹிகமான ஸுகத்தையே அதாவது இக்கர்மபூமியில் அடையக்கூடிய அன்னபானுதி ஸுகத்தையே விரும்புகின்றனர். விவேகிகள் ஸ்வர்க்கம் முதல் மோக்ஷபரியந்தமான ஆமுஷ்மிக ஸுகத்தை விரும்புகின்றனர். இவ்விரண்டுவிதமாக உள்ள ஸுகத்தையளிக்க வல்ல உபாயத்தைஅறிந்து மற்றவர்களேயும் புனிதர்களாகச்செய்யவேண்டுமெனக் கருணைகொண்ட ஓர் மஹான், ஸ்ரீ ராமபிரான் திருவடிகளைப் பஜித்தால் சகல சிரேயஸ்ஸையும் அடையலாம். ஆகையால் எல்லா ஜனங்களும் பகவத் சரணரவிந்தங்களில் திருடமான பக்தியைச் செய்து ஜன்மஸாபல்யத்தையடையவேண்டுமென்றுதெரிவிக்கிருர். ஸ்ரீமத்பாகவதத்திலும் **श्रवणं कीर्तनं विष्णोः** என்று பகவானுடைய குணகணங்களைக் கேட்பதும் சொல்லுவதும் சிறந்த பக்தியாக வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகையால், பக்தியோகமே சிறந்தது.

வேதாந்தஸாரம்.

"வியஷ்டி அக்ஞான நிரூபணம்."

(180-வது பக்கத்தொடர்ச்சி)

வனத்திலுள்ள விருக்ஷங்கள் ஸமுதாயமாக ஒன்றாயிருந்தாலும், அதைப் பிரித்துக்கூறவேண்டுமென்று தோன்றினால் வனத்தினுடைய மரங்கள் என்று அனேகங்களாகவும், ஸமுத்திரத்தினுடைய ஜலத்தை வியஷ்டி அபிப்பிராயத்தால் ஜலங்கள் என்று பலவாகவும் எங்ஙனம் கூறப்படுகின்றதோ, அங்ஙனமே அக்ஞானத்தையும் வெவ்வேறாகப் பிரித்து(வியஷ்டியாக)த் தெரிவிக்க வேண்டுமென்று கருதினால் அனேகமாகும். இவ்விதம் அபிப்பிராயப்படலாமென்று "**मायाभिः**" என்ற சுருதியே அறிவிக்கின்றது. இந்தச் சுருதி "பரமேசுவரன் ஒருவராயிருந்தாலும் (மாயைகளால்) அக்ஞானங்களால் பல ரூபங்களையுடையவர்போல் அறியப்படுகிறார்" என்றுசொல்லுகிறபடியால் அக்ஞானங்கள் அநேகமென்று வெளியாகின்றது. இங்குக்கூறப்பட்டஸமஷ்டி, வியஷ்டி என்கிற பதங்களுக்கு ஸமஷ்டி யென்றால் ஸமுதாயமென்றும், வியஷ்டி என்றால் பிரத்தியேக மென்றும் அபிப்பிராயமாகும். இந்த வியஷ்டி அக்ஞானமானது நிகிருஷ்டமான உபாதியையடைந்திருப்பதால் தோஷத்துடன்கூடிய ஸத்வகுணத்தைப் பிரதானமாகவுடையது. இந்த அக்ஞானோபஹிதமான சைதன்யமானது அற்பக்ஞத்வம், அநீசுவரத்வம் முதலான குணங்களையுடையதாகவும், பிராக்ஞனாகவும் (ஜீவனாகவும்) சொல்லப்படுகின்றது. வியஷ்டி அக்ஞானோபஹிதமான சைதன்யத்திற்கு மலின ஸத்வ பிரதான மாயோபாதியை யடைந்திருப்பதால் அதிகப் பிரகாச

மில்லாததினலே பிராக்ஞத்வம் (ஜீவத்தன்மை) ஏற்படுகின்றது. பிராக்ஞனென்கிற இந்த ஜீவனுக்கும் வியஷ்டி அக்ஞானமானது அகங்காரம் முதலியவைகளுக்குக் காரணமாயிருப்பதால் காரண சரீரமாகும். ஆனந்தாதிகத்தாலும், கோசம்போல் ஆச்சாதனம் செய்வதாலும் ஆனந்தமயகோசமாகின்றது. ஸகல பிரபஞ்சோபரம மேற்படுவதால் ஸுஷுப்தியாகவும் கூறப்படுகின்றது. ஆகையால்தான் ஸ்தூல ஸூக்ஷ்ம சரீர பிரபஞ்சங்களுக்கு லயஸ்தானமாகக் கருதப்படுகின்றது. அந்த ஸுஷுப்தி தசையில் ஈசுவான் பிராக்ஞனென்கிற இவ் விருவர்களும் சைதன்யத்தால் பிரகாசிக்கின்ற மிகவும் ஸூக்ஷ்மமான அக்ஞான விருத்திகளால் ஆனந்தத்தையனுபவிக்கின்றார்கள். "நன்கு பிரகாசிக்கும் சைதன்யத்தையுடைய ஜீவன் ஸுஷுப்தியவஸ்தையில் ஆனந்தத்தையனுபவிக்கிறான்" என்று சுருதியிலும் கூறப்பட்டிருக்கின்றது. **सुखमहमस्वाप्सं न किंचिदवेदिषं** "நான் ஸுகமாகத் தூங்கினேன். ஒன்றையுமறியேன்" என்று நன்றாய் நித்திரைசெய்து எழுந்திருந்தவர்களுடைய ஸ்மரணமுமிருக்கின்றது. இங்குசொல்லப்பட்ட ஸமஷ்டி, வியஷ்டி அக்ஞானங்களுக்கு வனத்திற்கும் விருக்ஷத்திற்குமிருக்கும் பேதத்தைப்போலாவது, ஸமுத்திரத்திற்கும்ஜலத்திற்கும் இருக்கும் பேதத்தைப்போலாவது பேதமுண்டென்று அங்கீகரிக்கவேண்டும். ஸமஷ்டி, வியஷ்டி, அக்ஞானோபஹிதர்களான ஈசுவர ஜீவர்களுக்கும் வனம் விருக்ஷம் இவைகளுக்குள்ளடங்கியிருக்கும் ஆகாயங்களின் பேதத்தைப்போலாவது, ஜலாசயம், ஜலம் இந்த இரண்டிடங்களிலும் பிரதிபிம்பித்திருக்கும் ஆகாசங்களுடைய பேதத்தைப்போலாவது பேதம்உண்டென்று அறிந்துகொள்ளவேண்டும். வனம், விருக்ஷம் இவ் விரண்டிடங்களிலும் அவச்சின்ன ஆகாயங்களுக்கும் ஸமுத்திரம், ஜலம் இவ் விரண்டிடங்களிலும் பிரதிபிம்பித்திருககும் ஆகாயங்களுக்கும், அதிஷ்டான பூதமாயும், வேறாயும், அனுபஹிதமாயும் விளங்கும் சுத்தமான ஆகாயம்போல் அக்ஞானமென்ன, அக்ஞானோபஹித ஜீவன், ஈசுவரன் இவர்களென்ன, இம் மூன்றுக்கும் ஆதாரபூதமாயும் இவைகளைக்காட்டிலும் வேறாயும், அனுபவஹிதமாயும் யாதொரு சைதன்யமுண்டோ, அதுதான் துரீயம் என்று சொல்லப்

படுகின்றது. இதைத்தான் "இரண்டாவதற்று ஒன்றாய் விளங்கும் சிவத்தை நான்காவதாகக் கருதுகிறார்கள்" என்று சுருதியும்வெளியிடுகின்றது. நான்காவதான இந்த சுத்த சைதன்யம்தான் அக்ஞானம். அக்ஞானோபஹித சைதன்யங்கள் இவைகளோடு அக்கினிபோல் விளங்கும் பழுக்கக் காய்ந்த இரும்புக் குண்டுபோல் ஏகரூபமாயிருந்துகொண்டு மஹாவாக்கியத்திற்கு வாச்யமாகின்றதென்றும், வேறாக இருந்துகொண்டு லக்ஷ்யார்த்தமாகிறதென்றும், சொல்லப்படுகின்றது. இந்தப்பிரகாரம் ஜீவேசுவர ரூபங்களை நிரூபித்து இனி அக்ஞானத்தினுடைய இரண்டு சக்திகளும் நிரூபிக்கப்படுகின்றன.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வைக்கமும் ஈழுவர்களும்.

(192-வது பக்கத்தொடர்ச்சி)

ஆனால் இப்போது குருவின் மனதை அனுசரித்து சீடனிருப்பதுபோய் சீடனிஷ்டப்படி குரு நடக்கும் காலம். தாய்தகப்பனுக்கடங்கிப் பிள்ளையிருப்பதுபோய் தாய்தகப்பன் கர்னாடகம் அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை யென்று அவர்களுக்குப் பிள்ளை உபதேசிக்கும் காலம். கணவனின் இஷ்டப்படி மனைவி இருப்பது போய் மனைவியின் இஷ்டப்படி கணவன் பணியும் காலம். மனதை அடக்கி சாஸ்திரப்படி நடப்பதுபோய் சாஸ்திரத்தை உதறி மனப்படி நடக்கும் காலம். இவ்வளவெல்லாம் வந்ததற்குப் பிறகும் காலுக்குத் தகுந்தபடி செருப்பைக் கத்தரிப்பதுபோய் செருப்புக்குத் தகுந்தபடி காலைக்குறுக்க வேண்டியது போலாயிற்று. இனி வேதசாஸ்திரம் கண்டபடியெல்லாம் சொன்னால் எனக்கு அந்த இந்துமதம் வேண்டாமாம். பால்குடிக்கும் குழந்தை எனக்கு அம்மா வேண்டாமென்பதற்கொப்பாய் இருக்கிறது. நடப்பதெல்லாம் ஈசனுக்குத் தெரியும். ஆகவே ஆஸ்திகர்

களே! விழியுங்கள். உண்மையான ஸத்குருக்களை நாடுங்கள். கஷ்டங்களை விலக்கிக்கொள்ளுங்கள். ஒரு சமயம் நான் வர்ணு சிரமி என்றும், அடுத்தநிமிஷம் அது வேண்டாமென்றும் முன் பின் விரோதமாய்ச் சொல்லிக்கொண்டு உலகத்தைத் தாறுமாறாய்ப் புரட்டி கலகத்தையும் கலக்கத்தையும் உண்டுபண்ணுபவர்களது வசனத்தை மதவிஷயத்திற் பொருட்கொள்ளாது லோகாசார்யரான வேதசாஸ்திர ரத்னக் களஞ்சியங்களான பரம்பரை சுத்தர்களான லோகக்ஷேமார்த்தம் திரிபுரஸுந்தரீ சந்திரமௌளீசுவர ஆராதனு துரந்தரர்களான சிஷ்யானுக்கிரக குதூகலர்களான லோககுருவின் சரண கமலங்களை வழிபடுங்கள். பாபங்களைத் தொலையுங்கள். கலியைத் தீருங்கள். மங்களம் பெருகுக.

சுபம்.

M. N. சுப்பிரமணிய சாஸ்திரீ.

मार्गसहायः । மார்க்கஸஹாயர்.

வேத ஸாரமாகிய மஹாருத்திரம், பரமேச்வரனை மார்க்க ஸஹாயரென்று அறிவிக்கிறது. பக்தர்களுக்கு இவ்வுலகிலும், விண்ணுலகிலும் செல்லக்கூடிய மார்க்கத்தை யுண்டாக்கி அம் மார்க்கத்தில் துணைவராயும் நின்று ரக்ஷித்துவரும் பரமேச்வரனைப் போற்ற யாம் யாவரும் கடமைப்பட்டுள்ளோம். மிக்க ஆச்சர்யமான ஸங்கல்பங்களையும் அனுயாஸமாய் நடத்தி நடனம்புரிகின்ற எம்பெருமானின் சக்தியின் ஓர் சிறிதளவில் யாவும் அடங்குகின்றது. மூவுலகிற்கும் ஒப்பற்ற விலக்ஷணம் பரமாத்ம வஸ்துவாயிருப்பினும் பக்தானுக்ரஹார்த்தமாக, மார்க்கமாயும், மார்க்கத்திற்குப் பதியாயும் இருக்கும் சிவபெருமானை, மார்க்கமறிந்த மறையோரனைவரும் கொண்டாடுகிறார்கள், அவ்விதமான மார்க்க பந்துவுக்கு எக்காலத்திலும் எப்போதும் முக் காரணங்களாலும் வந்தனமளிப்போமாக.

विश्वोत्तरोत्तरविचित्रमनोरथस्य यस्यैव शक्तिशकले सकलं समाप्तम् ।
अध्वानमध्वपतिमध्वविदो वदन्ति तस्मै नमः त्रिभुवनैकविलक्षणाय ॥

என்று சைவபுராணத்துச் சதருத்ரீய ஸம்ஹிதையில் அடங்கின விரிஞ்சிபுர மாகாத்ம்யத்தில் இச் செய்யுள் கூறப்பட்டிருக்கிறது.

இக் கலியில், பக்தர்களுக்கு அனுபாஸமாய் நற்கதி பெறுவதற்குச் சிறந்த க்ஷேத்திரங்கள் எட்டு. அவையாவன:— காசீ, ஸ்ரீ காளஹஸ்தி, திருவண்ணாமலை, திருவங்காடு, காஞ்சீபுரம், சிதம்பரம், விரிஞ்சிநகரம் என்பனவாம். இவைகளில் விரிஞ்சிபுரம் என்னும் க்ஷேத்திரத்தில், சந்திரசூடனான சிவன் ஐஹிகமாயும், ஆமுஷ்மிகமாயும் உள்ள மார்க்கத்திற்குத் துணைவராய் நின்று மார்க்கஸஹாயர்என்ற திருநாமத்தோடு, மரகதவல்லியம்மனுடன் ப்ரஸன்னமாய்ப் பிரகாசித்துவருகிறார். அப் புராணத்திற் கூறியபடி, முதன் முதலில் ஐஹிகமான மார்க்கத்திற்கு ஸஹாயராயிருந்துவந்த வரலாற்றை எழுத முன்வருகிறேன்.

முன்னொருகாலத்தில் குந்தள நாட்டில் தன்பெயராலேயே தன்பெருமையை வெளிக்காட்டுகின்ற தர்மபாலன்என்ற ஓர் வைசியன், வியாபாரங்களைச் சரிவரச்செய்து கொண்டு வந்தான். அவன் தனது வர்ணாசிரமதர்மம் தவராமலிருந்ததோடு சிவபக்தனாயும், அந்தணர்களிடம் மிகுந்த அன்புள்ளவனாயுமிருந்தான் அவன் முன் ஜன்மாவின் புண்யப்பயனால், விபூதியைத்தரித்து ருத்ராக்ஷதாரணஞ்செய்து, சிவனடியார்களை நேசித்து, ஸன்மார்க்கம் கைப்பற்றி, வியாபாரஞ்செய்து வரலானான். அவன் ஒரு சமயத்தில், காஞ்சிமாநகரில் மாமரத்தினடியில் வீற்றிருக்கும் ஏகாம்பரநாதரைத் தர்சனம்பண்ண விருப்பங்கொண்டவனாய், வியாபாரங்களுக்கும் அந்நகர்பொருத்தமானது என்றுகருதி,மிளகு, பாக்கு, இரத்தினங்கள், பூஷணங்கள் முதலானவைகளை ஏராளமாய்ச் சேகரித்துக் காளைமாடுகளில், பொதிபொதியாய் ஏற்றுவித்து பிரயாணமானான். அக்காலத்தில் அனேகமாய் வழிகள் யாவும் காடடர்ந்தவைகளாயே இருக்கும். மேலும் அவ்வழிகளில் கள்வர்கள் வழிமறித்துக் கொள்ளையிடுவார்கள். ஆகையால் அந்த தனபாலன், ஓர் கானகத்தையடைந்தபோது, நமக்குஸ்ஹாயர் யார் இக்காட்டில் கிடைக்கப்போகிறார் என்று சிந்தித்தவண்ணமாய்ச் சென்றுகொண்டிருந்தான். அத்தருணத்தில் அவனு

க்கு ஓர் வேதியர் தென்படவே, அவரையாதரவுடன் ஆஸனம் முதலானதால் அவன் ஆதரித்து, தாங்கள் எவ்வூர்?எதற்காக இக் கானகம்வந்தீர்? என்று வியம்பவே, அப்பிராமணன், நான் கர்ணு டக தேசத்திலிருப்பவன், தீர்த்தயாத்திரையாகப்புறப்பட்டேன், மார்க்கத்தில் விரிஞ்சிபுரம் என்ற க்ஷேத்திரத்தை தர்சித்தேன். அக்ஷேத்திரத்தின் வைபவம் சொல்லி ஸாத்தியப்படாது.கண் ணாக்கண்டால்தான் அதன் மஹிமைவிளங்கும், பக்தர்களுக்குக் கற்பக விருக்ஷமாய் பிரகாசிக்கும் சிவபிரான் மார்க்கஸஹாயர் என்ற தனது திருநாமத்தாலேயே, செவிசாய்த் தவர்களுக்குக் களிப்பையுண்டாக்குகிறார். மூவுலகிலும் அவர்மஹிமையை யறி யாதவரில்லை. நீ கேட்டதில்லையா? அவரை உள்ளன்புடன் நினை த்தால் திருட்டுப்பயமேற்படாது அது வியாபாரமும் வலுக்கத் தக்க இடம். ஏராளமானபொருள் கிடைக்கும் என்றார்.

அமுதத்திற்குச்சமமான அம் மொழியைக்கேட்ட தத்க்ஷ ணமே அந்த தனபாலன். மார்க்கஸஹாயனைத்தியானித்து, பக வானே; நூறுமூட்டை மிளகையும், நூறுமூட்டைப்பாக்கையும், ஆறுயிரம் பொன்னையும் தங்களுக்கு நான் ஸமர்ப்பிக்கிறேன். தாங்கள் எனக்கு மார்க்கஸஹாயராய் நின்று காத்தருளவேண் டும். என்று பிரார்த்தனை செய்து, தனது உள்ளங்கையில் ஓர் சிறு லிங்கத்தைவைத்துப் பூஜைபண்ணிக்கொண்டு, அனேககாடு களைத் தாண்டிவந்தான். அப்போது ஓர் பெருங்காடு ஒன்று தென்படவே, அவன்பயத்தை யடைந்தபோதிலும், மார்க்கஸ ஹாயரை நினைந்து, பூஜையையும் தவறாமல் நடத்திக்கொண்டே புறப்பட்டான் அப்போது கருணைவள்ளரான மஹேச்வரனும் குதிரையிலேறிக்கொண்டு வில்லும், வாளும், அம்புந்தரித்துக்கொ ண்டு, முன்னும் பின்னும் இருபக்கங்களிலும் இடசாரி வலசாரி யாய்க் குதிரையை நடாத்திக்கொண்டு "அஞ்சவேண்டாம், நான் துணைவனுய்வருகின்றேன்." என்று தனபாலனையும், அவனைச் சார்ந்தவர்களையும் தைர்யப்படுத்திக் கொண்டு சென்றார். அத் தனபாலன் அக்குதிரைவீரனை முன்னிட்டுக்கொண்டே ஸப்ததுர் க்ககிரியின் பக்கம்வந்து சேர்ந்தான். அப்போது பகவான் சிறிது பயத்தை யுண்டாக்குவோம். இல்லாவிடில் அவன் முதன்முத

லில் அர்ப்பிப்பதாகச் சொன்ன பொருள்களை அளிக்கமாட்டான். வைசியர்கள் லோபகுணமுள்ளவர்கள். ஆகையால் சற்று ஓரிடத்தில் தாமதிப்போம் என்று பின்னால் தங்கிக்கொண்டு, வைசியனைக்கண்டு தனபாலனே? அனேகமாய் ஸப்ததுர்க்ககிரி ப்ராந்தத்தைக்கடந்துவிட்டாய் இனி பயப்படவேண்டுவதில்லை என்று சொல்லி, அங்கு விடுதியேற்படுத்திக் கொள்ளும்படி செய்தார். அவ்வியாபாரியும் அதற்கிசைந்து, ஓர் பெரிய கூடாரமடித்து அதில் மூட்டைகளையிறக்கி வைத்து, அங்குள்ள ஓர் நதியில் நீராடி பில்வமரத்தினடியில் சிவலிங்க பூஜையைச் செய்யத் தொடங்கினான். அப்போது பரமேசுவரன் மாயையால் ஓர் புலியையுண்டாக்கிவிடவே அது வேகமாய்ச்சென்று கூடாரத்தில் நுழைந்து, அவனது பத்னிமார்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே உத்தான சாயியான அவனது குழந்தையை வாயில்கவ்விக் கொண்டு ஓடிற்று. அவன் மனைவி அதைப்பார்த்து மூர்ச்சையடைந்து தரையில் விழுந்து, மறுபடி பிரக்ஞையை யடைந்து கதறினாள். அதேசமயத்தில் அனேக கள்வர்கள் பணப் பெட்டிகளையும் சாமான் மூட்டைகளையும் இரத்தினபரணங்களையும் கொள்ளையடிக்கத் தலைப்பட்டார்கள். அப்போது அவ்வைசியனின் வேலையாட்கள் கோலாஹலஞ் செய்யவே திருடர்கள் அவர்களையும் துன்பப்படுத்தத் தொடங்கினார்கள். அதனால் அவ்வேலையாட்களும் ஓடிவிட்டார்கள். இச்சமாசாரத்தை செவியுற்றும் பகவானுடைய பூஜைக்கு இடையூறு கூடாது என்று நினைத்து ஆஸனத்தை விட்டு நகராமலே பூஜையை முடித்தான். அப்போது அவனது திடபக்தியைக் கண்ணுற்ற குதிரை வீரன் அனேக காலாட்படையோடு விரைந்து சென்று கள்வரைப்பிடித்து கயறுகளாலும், விலங்குகளாலும் சிறைப்படுத்திக் கடுமையாகக் கண்டித்து அறைந்தான். அதற்குள் பூஜையைமுடித்து, தனபாலன் திருடர்களைப் பார்க்கவே, அவர்கள் நெற்றியில் விபூதியையும் கழுத்தில் ருத்திராக்ஷங்களையும் கண்டு வியந்து, இவர்கள் கொல்லத்தக்கவர்களாயினும், விபூதி ருததிராக்ஷங்ள் தரித்திருப்பதால் விட்டு விடத்தக்கவர்கள் என்று அவர்களைச் சிறையினின்று தப்புவித்து விட்டார்.

இதனால் குதிரைவீரன் சினங்கொண்டு காலாட்படைகளுடன் அவ்விடத்திலிருந்து விலகிவிட்டார். பிறகு வைசியனின் வேலையாட்கள் புலியைக்கொல்லச் சென்றார்கள். தனபாலனோ சோகங்கொண்டவனாய் மரத்தடியில் உட்கார்ந்தான். அப்போது தூரத்தில் குழந்தையின் குரல் கேட்டது. அங்கு கொடிகளாலும் முட்களாலும் மூடப்பட்ட ஓர் சிவலிங்கம் பில்வமரத்தினடியில் தென்பட்டது. அதற்கு முன்னால் கட்டை விரலை வாயில் வைத்துக்கொண்டு சிறித்துக்கொண்டு, புஷ்பசயனத்தில் படுத்து விளையாடிக்கொண்டிருந்த குழந்தையை வேலைக்காரர்கள்கொண்டு வந்து அவனிடம்கொடுத்தார்கள். தனபாலன் ஆச்சர்யமடைந்து மனைவியுடன் குழந்தையைத் தழுவிப் பேரானந்தங் கொண்டான். பிறகு அந்த லிங்கத்திற்கு மண்டபங் கட்டுவித்து பூஜித்து **बालशार्दूलेश्वरः** பாலசார்த்தூலேசுவரர் எனத் திருநாமமிட்டான். அது முதல் பாலசார்த்தூலபுரம் என்று அவ்விடத்திற்குப் பெயர்வழங்கலாயிற்று. பில்வபத்திரம் முதலானதால் அவ்வீச்வரனையாராதித்து அனேகர் பல ஸித்திபெற்றிருக்கின்றனர், மார்க்க ஸஹாயனான சங்கரன், அதுமுதற்கொண்டு அவ்விடத்தில் பாலசார்த்தூலர் எனத்திருநாமங்கொண்டு திருட்டுபயத்தை நீக்கிக்கொண்டு **दस्यूनां पतये** என்ற ருத்திரார்தத்தை விளக்கிக்கொண்டு பிரகாசித்து வருகிறார்.

பிறகு வியாபாரிகளில் சிறந்தவனான அத்தனபாலன் அங்கேயே சிறிதுகாலம் வஸித்து, வியாபாரம் பெருகி, ஏராளமான செல்வம் பெற்றான். செல்வம் பெருகியே கர்வமும் மேலிட்டது.

क्षणमात्रं ग्रहावेशो याममात्रं सुरामदः ।
लक्ष्मीमदस्तु मूर्खाणामादेहमनुवर्तते ॥

பேய்பிடித்தால் அதன் விகாரம் கணநேரமேயிருக்கும். சுரையைக்குடிப்பதாலுண்டாகும் மதம் யாமமாத்திரமிருக்கும். செல்வத்தாலாகிய மதமோ (கொழுப்போ) மூடர்களுக்குச் சரீரம் உள்ள வரையில் வியாபரித்து நிற்கிறது. என்ற ஆன்றோர்சொல் பொய்யாகுமோ ? அதனால் தனபாலன் துர்ஜனஸஹவாஸமடைந்து, லோபகுணம் மேலிட்டு ஞாபகமுந்தவறினான். வித்தையால் கர்

வங்கொண்ட பிராம்மணன் எப்படியோ, அப்படியே செல்வப் பெருக்கால் கர்வங்கொண்ட வைசியனும் கீழ்மைப்படுவான். தனக்கு மார்க்கஸஹாயனுயிருந்து காத்தகடவுளைமறந்து, தான் பிரதிக்கினைசெய்தபடி மார்க்கஸஹாயருக்கு அளிக்கவேண்டிய பொருளையளிக்காமல், கர்வங்கொண்டு துர்ஜனஸஹவாசஞ்செய்து வரும் தனபாலனின் அகங்காரத்தை பகவானும் அடக்க எண்ணங்கொண்டார். ஒருநாள் தனபாலன் காலையில் எழுந்து, தனது மிளகு மூட்டை முதலானவைகளைப் பார்க்கவே, அவை யாவும் வேறுவேறு சாமான்களாய் காணப்பட்டன. இரத்தினங்கள் கற்களாயும், மிளகுமுதலிய சாமான்கள் பயறுமுதலான விலைமலிந்த சாமான்களாகவும் காணப்படவே, தனபாலன் மிகுந்த சோகங் கொண்டான். அப்போது பரமேஸ்வரன் ஜோசியரின் வேடம் பூண்டு அவனுக்கு முன்தோன்றினர். உலகத்திலுள்ள யாவருக்கும், ஜோஸியர் என்றால் பேசி யுறவாடிக்கேட்பது ஸஹஜமே. இயற்கையில் ஜோஸியந்தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் கேட்பவர்களுக்குத் தக்கவாறு பதிலளிக்கும் வல்லமை வாய்ந்தவனே போற்றப்படுவான்.

आयुःप्रश्ने दीर्घमायुः वाच्यं मौहूर्तिकैर्जनैः ।
जीवन्तो बहु मन्यन्ते मृताः प्रक्ष्यन्ति कं पुनः ॥

என்றபடி, ஆயுர்பாவம் கேட்பவனுக்கு, நீண்ட ஆயுளைச்சொல்வது, ஜோஸியனுக்கு உத்தமமான குணம். ஏனெனில், ஒரு சமயம் தீர்க்ககாலம் ஜீவித்திருந்தால் ஜோஸியனை அவர்கள் வெகுமானிப்பார்கள். இறந்துவிட்டால் கேட்பதற்கு அவகாசமேயில்லை. இங்கே ஸர்வேஸ்வரனுடைய விஷயத்தில் வியம்பவேண்டுமோ? அப்போது தனபாலன் தனது வரலாற்றைப் பிரஸ்தாபிக்கவே, அந்த ஜோஸியர் இது தெய்வக்குற்றத்தால் நேர்ந்ததாகத் தெரிகிறது. நீ ஆபத்துக்காலத்தில் காத்தகடவுளுக்கு ஸமர்ப்பிப்பதாகப் பிரார்த்தித்துக்கொண்ட பொருளை ஸமர்ப்பிக்கவில்லையென்று, விரிவாய் அவனுக்குத் தோன்றும்படி செய்யவே, ஆமாம், தாங்கள் சொல்வது உண்மையேயென்று அவரைக்கொண்டாடி அனுப்பிவிட்டு, அம்மூட்டைகளை அவ்வண்ணமே காளைகளிலேற்றிக்கொண்டு விரிஞ்சிபுரஞ்சேர்ந்தான். அந்நகரில் பிர

வேசிக்கவே, அவனுடைய சாமான்கள் யாவும் முன்னிருந்தவை போலவே ஆயின. கற்களாய்த்தோன்றின யாவும் இரத்தினங்களாயும், பயறுகத்தோன்றினவை மிளகாயும் ஆனவுடன், பேரானந்தங்கொண்டான். தான் அந்தக்ஷேத்திரத்தில் நிர்மலமாய் விளங்கும் பிரும்மதீர்த்தத்தில் மனையாளுடன் நீராடி பகவானை முக்காலத்திலும் தரிசித்துக்கொண்டு வியாபாரத்தை நடாத்திவந்தான். அப்போது காஞ்சீபுரத்திலிருந்து அநேக வைசியர்கள் வந்து சூழ்ந்து மிளகு மூட்டை முதலானவைகளை வாங்கிக்கொள்ளவே, தனபாலனுக்கு ஏராளமான தனலாபங்கிடைத்தது. அவன் எல்லாம் பகவத்கிருபையால் ஏற்பட்டது என்று நிச்சயித்து, அப்பொருள்களைக்கொண்டு பிராகாரங்கள், கோபுரங்கள், மண்டபங்கள் முதலானவை கட்டுவித்து, அங்கு பாழாகக்கிடந்த புண்ணிய தீர்த்தங்களையும் நிர்மலமாகச்செய்து, அநேக வீடுகளைக் கட்டி, பிராமணர்களுக்குத் தானஞ்செய்து, சிவனடியார்களை நேசித்துக் காலங்கடத்தினான். அவனது மனைவியால் தூண்டப்பட்டு, அச்வவீரனாய் முதன்முதலில் பகவான் காத்தருளியதைச் சிந்தித்து பொன்மயமான குதிரை வாஹனத்தைச்செய்து அதில் இரத்தினங்களைக்கொட்டி பகவானுக்கு அர்ப்பித்தான். மேலும் வெள்ளிமயமான விடபத்தையும், மற்றுமுள்ள வாஹனங்களையும் செய்து ஈச்வரார்ப்பணஞ் செய்தான்.

அந்த விரிஞ்சிநகரம் வேலூர் எனப்படும் நகரத்திற்கு ஐந்தாறுமைல் தூரத்தில் பாலாற்றங்கரையில் பிரகாசித்துவருகிறது. இவ்வாறு தனபாலன் சிவதர்மங்களை ஒழுங்காக நடத்திவருவதுடன், மற்றுமுள்ள அநேக தர்மங்களை நடாத்திக்கொண்டு பகவானுடைய கருணையால் பூலோகக் குபேரனாய் வாழ்ந்துவந்தான். இவ்விதம் பகவான் மார்க்கஸஹாயனாய் அந்த க்ஷேத்திரத்தில் விளங்கிவருகின்றார்.

शक्तिरूपो महाविष्णुः शिवरूपो हरस्तथा ।
हरिरेव हरस्साक्षात् हर एव हरिःस्वयम् ॥
एतयोरन्तरं नास्ति भेदात्तु नरकं व्रजेत् ।
निष्कलः परिपूर्णोऽपि शक्त्या युक्तो महेश्वरः ॥

तिस्रो मूर्तीरधिष्ठाय लोकलीलां करोति हि ॥

என்றபடி, மஹாவிஷ்ணு சக்திஸ்வரூபியாயும், ஹரன் சிவஸ்வரூபமாயும் விளங்குகிறார். ஹரியே ஹரன். ஹரனே ஹரி. இவர்களின் மகிமையைத் தீரவிசாரிக்குமிடத்து, பேதமென்பதேயில்லை. பேதத்தால் வியவகரித்தால் நரகங்கிடைக்கும். சக்தியுத்தனான மஹேச்வரன் எங்கும் வியாபியாயிருந்தாலும் மும்மூர்த்தி ரூபமாயிருந்து முத்தொழிலைச்செய்து உலக லீலையைச் செய்கிறார்.

எங்கேயாவது, யாதுகாரணத்திலாவது, தேவதைகளின் தாரதம்மியம் சொல்லப்பட்டிருந்தால் அதனுட்கருத்தை யாராய்தல்வேண்டும். அதாவது, மனது சஞ்சலமாயிருப்பதால் ஓரிடத்திலேயே பற்றச்செய்வதற்கு ஓர் பொருளின் மேன்மையைக்கூறுவது ஸஹஜமாகும். சாஸ்திரங்களும் புருஷனுடைய புத்தி நிலைமையை அனுஸரித்துத் தெளிவாய் ஓர் தேவதையின் மஹிமையைச் சிறப்பித்து அவனவனுடைய மனோபாவத்தை நிலைப்படுத்தி முடிவில் அவனவனை நல்வழிப்படுத்துகின்றன.

को वा देवतारहस्यानि तर्कयिष्यति ।

என்ற நியாயப்படி யார்தான் தேவதைகளின் ரஹஸ்யங்களை யூஹிக்கமுடியும்? ஆகையால் எவரெவருக்கு எந்தெந்த மூர்த்தியில் பற்றுதல் ஏற்படுமோ அவ்வாறொழுகி கடைத்தேறவேண்டியது கடமையாகும்.

இவ்வாறு பிரகிருதத்தில், தனபாலன் அத்வபதியான மார்க்க ஸஹாயனிடம் வழிபட்டு ஐஹிகமான 'மார்க்கத்தைக் கடந்து, தனலாபம் பெற்று, குறைவற்ற பக்தியுடனே விரிஞ்சிநகரத்தில் வாழ்நாள் கடத்தினான்.

இனி 'அடுத்த வியாஸத்தில் ஆமுஷ்மிகமான மார்க்கத்திற்கும், பகவான் ஸஹாயமாய் விளங்கினதை வெளியிடுவோம்.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரீ.
ஸோமசுந்தரபுரம், மதுரை.

அகில பாரதவர்ஷீய பிராம்மண மஹாசபை.

இம்மகாசபையின் ஆதரவில் சென்னை (ஸென்ட்ரல்ஸ்டே ஷன்பார்க்டவுனுக்கு அருகாமையிலுள்ள) லால்டாக்ஸ்ரோட், ஸ்ரீஜத் பரமானந்ததாஸ் சோடாதாஸ் அவர்களின் தர்மசாலையில் சென்ற ஏப்ரல்மீ 5வ ஞாயிற்றுக்கிழமை மாலை 3½ மணிக்கு ஸ்ரீமான் N. ஸ்ரீனிவாஸாசாரியார் B.A., B.L., அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் ஓர் மகாநாடு கூட்டப்பட்டது. அதற்கு M.K. ஆசாரியார் M. L. A., அவர்களும் மற்றும் பல பண்டிதசிகாமணிகளும் விஜயம் செய்திருந்தனர். அடியிற்கண்ட தீர்மானங்கள் இம்மகாநாட்டில் முறையே நிறைவேற்றப்பட்டன:—

(1) இம்மகாநாடானது, பிராம்மணர்களுக்குத் தங்கள் ஸ்வதர்மத்தில் உண்மை பக்தி குறைந்து க்ஷீணதசையையடைய நேர்ந்த ஸந்தர்ப்பங்களைப் பற்றி நன்கு யோசிக்கும்படிக்கும், ஒழுக்க முறையிலும், மதவிஷயங்களிலுமம், பிராம்மணர்களே ஏனைய பாரதீய ஜனங்களுக்கும் குருமார்களென்ற அவர்கள் உரிமையை அவ்வகுப்பினர் மீண்டும் பெறுதற்கு வேண்டிய முயற்சி செய்யும்படிக்கும் இவ்விந்தியாவிலுள்ள எல்லாப்பிராம்மணர்களையும்கேட்டுக்கொள்ளுகின்றது.

(2) இம்மகாநாடானது பொதுவாக பிராம்மணர்களையும், முக்கியமாக அதன் அங்கத்தினர்களையும் ஆங்காங்கு முக்கியமான விடங்களில் இதன் கிளைச்சபைகளை ஸ்தாபித்து, மகாசபையின் நோக்கங்களையும் அதன் வேலைகளையும் ஹிந்துகளுக்கு அறிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளுகின்றது.

3 (a) அன்றியும் இந்த மகாநாடானது பின்வரும் கனவான்களடங்கிய ஓர் கமிட்டியொன்றை நியமிக்கின்றது. இக்கமிட்டியின் அங்கத்தினர்களுக்கு சட்டதிட்டங்களைச் செய்யும் விஷயத்திலும் மாதாந்திர ஸப்ஸ்கிருப்ஷன், நன்கொடை இவற்றை வசூலிக்கும் விஷயத்திலும், மற்றும் இச்சபையின் அபிவிருத்திக்கு இன்றியமையாத மற்றகாரியங்களிலும் அங்கத்தினர்களின் தொகையை அதிகப்படுத்த அதிகாரமுண்டு.

3 (b) அவ்விதம் ஏற்படுத்தப்படும் நிர்வாகசபையானது கூடிய சீக்கிரத்தில் மஹாசபையின் பொதுக்கூட்டமொன்றைக்

கூட்டுவதுடன், தங்கள் வேலையைப்பற்றிய ரிபோர்ட்டு ஒன்றையும் அதற்கு ஸமர்ப்பிக்க வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

மேற்கண்ட 3 (a) தீர்மானப்பிரகாரம் பின்வரும் கனவான்கள் நிர்வாகசபையின் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அக்கிராசனாதிபதி:—

ஸ்ரீமான் M. K. ஆசார்யார் அவர்கள் M. L. A.,

உபாக்கிராசனாதிபதி.

ஸ்ரீமான் M. M. அனந்தராவ், ஏஜண்டு ஸனாதன தர்மா ஏஜென்ஸி திருவல்லிக்கேணி, சென்னை.

அங்கத்தினர்கள்.

1 ஸ்ரீமான் T. K. ஜகன்னாதாசாரியார், சபாஸ்தாபகர் பத்திராதிபர் "பிராம்மணன்"

2 ,, பண்டித உத்தாவ்ஜீகான்ஜீ சர்மா

3 ,, பண்டித T. K. சோமதேவசர்மா

4 ,, T. A. நரஸிம்மாசாரியார் B.A.,B.L., (பென்ஷன் ஸப் ஜட்ஜ்)

5 ,, வெங்கோபராவ் B.A.,B.L., (பென்ஷன் ஸப்ஜட்ஜ்)

6 ,, N. சுப்பிரமணிய அய்யர் M.A. (ரிடயர்டு திவான் பேஷ்கார், திருவாங்கூர்)

7 ,, கனம். K. V. ரங்கஸ்ஸாமி அய்யங்கார் (Member of the council of State)

மீட்டிங்கின் இறுதியில் பண்டித உத்தாவ்ஜீ கான்ஜீ சர்மா அவர்கள் மஹாசபைக்கு திரவியரூபமான தன்னுடைய சம்பாவனைசெய்து, அதனால் ஒவ்வொரு மெம்பரும் ஒவ்வொரு உத்ஸவ காலங்களிலும் மற்றுமுள்ள சந்தோஷ சமயங்களிலும் தன் சக்திக்கியன்றவாறு சபையின் சாசுவத நிதிக்கு உதவி புரியவேண்டுமென்னும் அங்கத்தினரின் மூன்றாவதான தர்மத்தை யனுட்டித்துக் காட்டினார். பிறகு அக்கிராஸனாதிபதியவர்களுக்கும் மற்றுமுள்ள கனவான்களுக்கும் வந்தனோபசாரங்கள் செலுத்தப்பட்டு சபை கலைந்தது என அதன் காரியதரிசி நமக்கு அறிவிக்கின்றார்.

உ

ஓம் பரப்பிர்ம்மணே நம:

ஹிந்து மதாபிமான ஸங்கம்,
நாகபட்டணம்.
34-வது வருஷபூர்த்தி உத்ஸவம்.

இவ்வருஷத்திய உத்ஸவத்தை ஸ்ரீ சங்கரஜயந்தியுடன் சேர்த்து நடத்தவேண்டுமென்று பலர் அபிப்பிராயப்பட்டதால் ஷை உத்ஸவம் குரோதன ௵ சித்திரை ௴ ௧௱௨ (24-4-25) ஸ்திர வாரம் முதல் ஆரம்பமாகி ஒருவாரம் நடைபெரும்.

பிரதி தினமும் தக்க பண்டிதர்களின் உபந்நியாசங்கள் நடைபெறுவதோடு, சித்திரை௴ ௧௲௨ (28-4-25) மங்கள வாரம் ஸ்ரீ சங்கரஜயந்தி தினமாதலால், அன்று விசேஷ ஆராதனைகளும், வீதி பிரதக்ஷிணமும் நடைபெறும்.

சங்கத்தின் அங்கத்தினர்களும், போஷகர்களும், தங்கள் தங்கள் சந்தா, நன்கொடைகளைச் செலுத்திவைத்து, உத்ஸவத்தை விமரிசையாக நடத்திவைக்க வேணுமாய் திருவருளைச் சிந்திக்கிறோம்.

P. S. சிவராமய்யர் B.A., B.L., (வக்கீல்) — தலைவர்.

ஆரு. முருகைய பிள்ளை (ஸ்ரீ நீலாயதாக்ஷியம்மன் கோயில் டிரஸ்டி) — உபதலைவர்.

N. சாம்பசிவய்யர் B.A., B.L., (வக்கீல்)
K. K. சுந்திரமய்யர் B.A., B.L., (வக்கீல்) — காரியதரிசிகள்.

ப. லே. லே. வே. சாஸ்திரி எனும் லெக்ஷ்மண சர்மா — உதவி காரியதரிசி.

R. சுப்பிரமணியய்யர் (வ. கு.) — பொக்கிஷதார்.

மதிப்புரை.

மித்திரன்:—இப்பெயர்வாய்ந்த மாதமிருமுறைப் பதிப்புள்ள வோர் தமிழ்ப்பத்திரிகையை அதின் எடிட்டர் மகா-ா-ா-ஸ்ரீ ஏ. ராமய்யரவர்களாலனுப்பப் பெற்றோம். இது சகலஜனங்களும் சுலபமாயறியக் கூடிய எளிய தமிழ் நடையுடன் கூடியது. இதில் ராஜாங்கம், தேவஸ்தானம், தர்மஸ்தாபனம், மதங்கள், கல்வி முதலிய விஷயங்களும் மிராசுதார்களுக்கு வேண்டிய விஷயங்களும் சுருக்கமாய் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதினால் கும்பகோணத்திலுள்ள பல பொது விஷயங்களை நன்கு தெரிந்து கொள்ளலாம், இதின் வருஷசந்தா **3—0—0**

வியாசப்பரிசளிப்பு.

மாணவர்கள் 'இல்லறத்'தைப்பற்றி இனியசெந்தமிழ் நடையில் ஓர் வியாசம் 25–3–25வுக்குள் வரைந்தனுப்புகிறவர்களுள் ஒருவருக்கு ஓர் வெள்ளிப்பதக்கம் இனாம் அளிக்கப்படும் என்று ஏற்கனவே பிரசுரம் செய்திருந்ததை முன்னிட்டு பல மாணவர்களும் மாணவிகளும் அதிகநாள் கேட்டுக்கொண்டபடி வியாசம் அனுப்புவதற்கு கெடுஏப்ரல் மாதம் 25 தெய்திவரையில் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

க. குப்புசாமிபிள்ளை.
ஸ்ரீ சரஸ்வதிவிலாஸ சன்மார்க்கசங்க காரியதரிசி
திருமங்கலக்குடி.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.